முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 568**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

19.04.2021, திங்கட்கிழமை

1. அறம் காக்க வந்த அண்ணலே
அழியாமை தர வந்த வள்ளலே
வரம்தந்து உலகமக்களை
வையகத்தில் வாழ்வாங்கு வாழ அருள்புரிய
2. அருள்புரிய ஆறுமுகன் என் சக்தியாக
அவதாரமாக வந்த அரங்கஞானியே
அருள்பலம் கூட சுப்ரமணியர் யானும்
அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி அருளுவேன்
3. அருளவே அரங்கனே உன் கரம்பட
அன்பர்களுக்கு அகிலத்தில் கிட்டும் ஞான தீட்சை மூலம்
வரங்களாக மாறி அவர்கள் வாழ்வினில்
வாசியோக சர்வயோக சித்திகளும் உண்டாகும்
4. ஆகவே அரங்கன் தருகின்ற உபதேசங்கள் அனைத்தும்
அகிலத்தார்க்கு வேதங்களாக மாறி இனிதே
வரங்களாக வாழ்வாதார பாதுகாப்பாக
வலம்வரும் வடிவேலன் என் சக்தியாகவும்
5. ஆகவே அரங்கனின் தர்மநெறியே
அகிலத்தார் ஏற்று வருதல் மூலமாக
யுகமே பாதுகாப்பு மிக்க காலமாக மாறி உலகில்
உண்மை நிலை மெய்ஞான ஆட்சி
6. ஆட்சிதனில் தயவு ஞானிகளின் துணை
அகிலத்தார்க்கு பேரிடர் பிற இன்னல் வாராத
பாதுகாப்பு நிலையும் தடையில்லாத வளர்ச்சியும் பொருளாதாரமும்
தன்னிகரில்லாத சேவை நோக்கங்களும் உலகில் வளர்ந்து மலர்ந்து
7. மலர்ந்த அரங்கன் இந்த அவதாரத்தின் நோக்கமாக
மண்ணுலகமே ஞானலோகமாகி அகிலம் பெருமாற்றம் பெறும்
அரங்கன் மூலம் அரங்கன் தொண்டர்கள் மூலம்
அகிலமே அற்புதம் காணும்
ஆறுமுகன் என் ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.